# தகவல் கொத்து
# Information Booklet
# 2016

**வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்**

**Wentworthville Tamil Study Centre**

**www.wtsc.org.au** **info@wtsc.org.au**

பாடசாலை நடைபெறுமிடம்: Girraween Public School
9 Bando Road, Girraween 2145

பாடசாலை நேரம்: சனிக்கிழமை பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை

HSC மாணவர்கள் மட்டும்: சனிக்கிழமை பிற்பகல் 1:30 மணி தொடக்கம் 5:30 மணி வரை
வியாழக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை

தபால் தொடர்புகட்கு: Wentworthville Tamil Study Centre Inc.
PO Box 557
Wentworthville 2145

இணையத்தளம்: **www.wtsc.org.au**

மின் அஞ்சல் தொடர்புகட்கு: info@wtsc.org.au

**முக்கிய திகதிகள்:**

1ம் தவணை: 30 – 01 – 2016 முதல் 09 – 04 – 2016 வரை

2ம்தவணை: 30 – 04 – 2016 முதல் 24 – 06– 2016 வரை

3ம்தவணை: 23 – 07 – 2016 முதல் 24 – 09 – 2016 வரை

4ம்தவணை: 15 – 10 – 2016 முதல் 17 – 12 – 2016 வரை

வகுப்பு புகைப்படம் எடுத்தல்: 13 – 08 – 2016

கலைவிழா: 03 – 09 – 2016

வருடாந்த பரிசளிப்பு விழாவும் இராப்போசனமும்: 10 – 12 – 2016

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

# ADVANCE AUSTRALIA FAIR

Australians all let us rejoice,
For we are young and free;
We’ve golden soil and wealth for toil;
Our home is girt by sea;
Our land abounds in nature’s gifts
Of beauty rich and rare;
In history’s page, let every stage
Advance Australia Fair,
In joyful strains then let us sing,
Advance Australia fair.

Beneath our radiant Southern Cross
We’ll toil with hearts and hands,
To make this commonwealth of ours
Renowned of all the lands;
For those who’ve come across the seas
We’ve boundless plains to share;
With courage let us all combine
To Advance Australia fair;
In joyful strains then let us sing,
Advance Australia fair.

# பாடசாலைக் கீதம்

வாழ்க வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
வாழிய வாழியவே
வாழ்க தமிழ் அன்னை ஆழிசூழ் உலகெல்லாம்
வாழிய வாழியவே!

(வாழ்க)

செம்மைமுறை வழி செந்தமிழ்ப் பள்ளியை
சேர்த்து வளர்த்திடுவோம்
எம்மையும் ஆதரித் தின்தமிழ் பயிற்றிடும்
ஈடில்லா நிலையமிதே

(வாழ்க)

ஈரமும் மானமும் வீரமும் போற்றுவம்
இறைவனைத் தினந்துதிப்போம்
ஈகையில் வாய்மையில் அடக்கம் உயர் பண்பில்
என்றுமே உயர்ந்திடுவோம்

(வாழ்க)

அன்பைப் பொழிந்தென்றும் ஒற்றுமை பேணியே
அருங்கலை கற்றிடுவோம்
இன்பத் தமிழ்ப் பள்ளி இனிது துலங்கிட எம்மையே
அர்ப்பணிப்போம்

(வாழ்க)

சங்கத் தமிழ் என்றும் மங்காப் புகழுடன்
தரணியில் ஓங்கிடவே
எங்கும் தமிழ்மொழி எதிலும் தமிழ் மணம்
எழிலுடன் வாழியவே!

(வாழ்க)

| | |
|---|---|
| முதற்பதிப்பு தை 1999 | First Edition January 1999 |
| இரண்டாம் பதிப்பு தை 2003 | Second Edition January 2003 |
| மூன்றாம் பதிப்பு தை 2004 | Third Edition January 2004 |
| நான்காம் பதிப்பு மாசி 2005 | Fourth Edition February 2005 |
| ஐந்தாம் பதிப்பு தை 2006 | Fifth Edition January 2006 |
| ஆறாம் பதிப்பு மாசி 2007 | Sixth Edition February 2007 |
| ஏழாம் பதிப்பு தை 2008 | Seventh Edition January 2008 |
| எட்டாம் பதிப்பு தை 2009 | Eight Edition January 2009 |
| ஒன்பதாம் பதிப்பு தை 2010 | Nineth Edition January 2010 |
| பத்தாம் பதிப்பு தை 2011 | Tenth Edition January 2011 |
| பதினோராம் பதிப்பு தை 2012 | Eleventh Edition January 2012 |
| பன்னிரண்டாம் பதிப்பு தை 2013 | Twelth Edition January 2013 |
| பதின்மூன்றாம் பதிப்பு தை 2014 | Thirteenth Edition January 2014 |
| பதின்நான்காம் பதிப்பு தை 2015 | Fourteenth Edition January 2015 |
| பதினைந்தாம் பதிப்பு தை 2016 | Fifteenth Edition January 2016 |
| பதினாறாம் பதிப்பு ஆனி 2016 | Sixteenth Edition June 2016 |

வென்றுவேத்வில் தமிழ்க்கல்வி நிலைய வெளியீடு

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
த. பெ. இல 557
வென்ற்வேத்வில்
நியூ சவுத் வேல்ஸ் 2145
அவுஸ்திரேலியா

Compiled by:

Wentworthville Tamil Study Centre Inc.
PO Box 557
Wentworthville NSW2145
Australia

அன்பான பெற்றோர்களே,

இந்த வெளியீடு கடந்த கால மற்றும் தற்கால செயற்குழுவினரின் முயற்ச்சியினால் உருவாக்கப்பட்டது.

இது பாடசாலையின் அன்றாட மற்றும் விசேட நடவடிக்கைகளைப் பெற்றோர் பாதுகாவலருக்கு விளக்கும் நோக்கத்துடனும் அவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அறியத்தரும் நோக்குடனும் தயாரித்து வழங்கப்படுகிறது.

**எமது தமிழ்ப் பாடசாலையால் நடாத்தப்படும் போட்டிகளின் விதிமுறைகளும் மதிப்பீட்டு முறையும் மீளாய்வு செய்யப்பட்டு பதினாறாவது பதிப்பாக இக்கையேடு வெளியிடப்பட்டுள்ளது.**

இதில் ஏதாவது திருத்தங்களோ, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள், தகவல்களோ இருப்பதாகப் பெற்றோர் கருதினால் அதை செயற்குழுவினரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறோம்

நன்றி.

செயற்குழு,
வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்.

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
# செயற்குழு - 2016

| பதவி | பெயர் |
|---|---|
| தலைவர் | திரு கதிர்காமநாதன் நரேந்திரநாதன் |
| உப தலைவர் | திரு. சின்னராஜா தணிகைராஜன் |
| உப தலைவர் | திரு. நாகரத்தினம் சுகிர்தன் |
| | |
| செயலாளர் | திரு. குணரட்ணம் பார்தீபன் |
| உப செயலாளர் | திருமதி. சங்கீதா சிறிதரன் |
| உப செயலாளர் | திரு. கோபாலகிருஷ்ணன் ரமேஷ்குமார் |
| | |
| பொருளாளர் | திரு. கணேசன் வரதன் |
| உப பொருளாளர் | திரு. செல்வராஜா சுபநேசன் |
| உப பொருளாளர் | திரு. கந்தசாமி பகீரதன் |
| | |
| செயற்குழு உறுப்பினர் | திருமதி. வினோதினி செல்வராசா |
| செயற்குழு உறுப்பினர் | திருமதி. பிரதீக்கா சிவகுமார் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. மகேஸ்வரன் பிரபாகரன் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. பத்மநாதபிள்ளை சிவறஞ்சன் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. கிருபாதரன் ஜெகன் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. விஜயரட்ணம் விஜயானந்தன் |
| | |
| அதிபர் | திரு. தேவசகாயம் தேவரஞ்சித் |
| உப அதிபர்கள் | |
| கீழ்ப் பிரிவு | திருமதி. சாலினி சிவசுதன் |
| மேற் பிரிவு | திரு. பொன்னையா அருளானந்தன் |

“இப்பாடசாலையானது பெற்றோர்கள், தொண்டர் ஆசிரியர்கள், நலன் விரும்பிகளினால் நடாத்தப்படுகின்றது. இப்பாடசாலையில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதன் மூலம் நீங்களும் பாடசாலையின் அங்கத்தவர்கள் ஆவதுடன் மட்டுமல்லாது பங்காளிகளாகவும் ஆகின்றீர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.”

## எமது பாடசாலை

இவ்வருடம் தனது இருபத்தொன்பதாவது அகவையினைத் தொட்டுள்ள வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையமானது, 1988ம் ஆண்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் மொழிக்கல்வியுடன் தமிழர் பாரம்பரியங்கள் மற்றும் கலை கலாசாரங்களையும் புகட்டும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st) நான்கு அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் சிறார்கள் அனைவரும் பாடசாலையில் சேர்ந்து கொள்ள தகுதி உடையவராவர். முன்பள்ளி முதல் உயர்தரம் வரை தற்போது எமது பாடசாலையில் 702 மாணவர்கள் தமிழ் கற்கின்றார்கள். கடந்த பல வருடங்களாக நியூ சவுத் வேல்ஸ் (NSW) மாநில உயர்தரப் பரீட்சையில் பல மாணவர்கள் எமது பாடசாலையில் இருந்து தமிழ்ப் பாடத்தில் தோற்றுகிறார்கள். இவர்களது சிறந்த பெறுபேறுகள் எமது பாடசாலையின் கல்வித் தரத்திற்கு சான்று பகர்கின்றது.

பெற்றோர்கள் அங்கம் வகிக்கும் நிர்வாகக் குழுவானது பாடசாலை நிர்வாகத்தைச் சிறப்புற நடாத்துகின்றது. எமது சமுதாயதின் தமிழ்க் கல்வியாளர்களும், தமிழ் ஆர்வலர்களும்

தன்னார்வத் தொண்டர்களாகத் தமிழ் கற்பிக்கின்றார்கள். பெற்றோரும் மற்றுமுள தமிழ் பற்றாளர்களும் பாடசாலையின் பல்வேறு நடவடிக்கைகளிற்கு உதவுகின்றார்கள். இவர்கள் எல்லோருடைய அயராத தமிழ்ப் பணியினால் பாடசாலை தொடர்ந்து தமிழ் பணியினை செவ்வனே செய்துவருகின்றது.

இப்பாடசாலையில் சிறார்களுக்கு தமிழ் மொழியை பேச, எழுத, வாசிக்க கற்பிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்கள் சபை முன் தமிழில் பேசுவதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. பேச்சுப் போட்டியானது இரண்டாம் தவணையின் ஆரம்ப வாரங்களில் நடாத்தப்படுகின்றது. மாணவர்களின் தமிழ் மொழியில் பேசும் ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக மூன்றாம் தவணை ஆரம்பத்தில் வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்துவதற்காக மூன்றாம் தவணையில் கீழ் வகுப்பு மாணவர்களிற்கும், மேல் வகுப்பு மாணவர்களிற்கும் தமிழ் அறிவுப் (வினாவிடை) போட்டிகள் நடாத்தப்படுகின்றன. எமது இணையத் தளத்தில் உள்ள பாடசாலை நாட்காட்டியில் இப்போட்டிகள் நடைபெறும் தினங்களைப் பார்வையிடலாம்.

இத்துடன் மூன்றாம் தவணையின் நடுப்பகுதியில் நடாத்தப்படும் கலைவிழா நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து பங்குபற்ற வைப்பதன் மூலம் மாணவர்களின் முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) அறிவும் வளர்க்கப்படுகின்றது. இவை தவிர மாணவர்களின் கற்கும் ஆற்றலை ஊக்குவிக்குமுகமாக வருடம் முழுவதும் வகுப்பு மற்றும் வீட்டு வேலைகள் மூலம் மாணவர்களது எழுத்து மற்றும் வாசிப்புத் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் நான்காம் தவணையில் வாசிப்புத்திறன், எழுத்துத்திறன் மதிப்பீடுகளும் நடாத்தப்படுகின்றன.

மாணவர்களின் கற்கும் ஆற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் பேச்சுப் போட்டிகளிலும், வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிகளிலும், தமிழ் அறிவுப் (வினாவிடை) போட்டிகளிலும், எழுத்து மற்றும் வாசிப்பு மதிப்பீடுகளிலும் பங்குபற்றும் மாணவர்களுக்கு வருட இறுதியில் நடைபெறும் வருடாந்தப் பொதுக் கூட்டத்துடன் கூடிய இராப்போசன விருந்தின் போது பரிசுக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து தமிழ் கற்பதை ஊக்குவிக்கும் முகமாக, நூறு சதவீத வரவிற்கு பரிசளிப்பு விழாவில் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தபால் தொடர்புகட்கு:
Wentworthville Tamil Study Centre Inc.
PO Box 557Wentworthville 2145

இணையத்தளம்:
www.wtsc.org.au

மின் அஞ்சல் தொடர்புகட்கு:
info@wtsc.org.au

# எமது பாடசாலை - வரலாறு

இக்கல்வி நிலையமானது நியுசவுத்வேல்ஸ் பாடசாலைத் தவணைகளில் வரும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை வென்ற்வேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையில் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville) 2003ம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது.

2004ம் ஆண்டு, இக்கல்வி நிலையமானது, வென்ற்வேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையில் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville) இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. முதலாம் பிரிவுக்கு பிற்பகல் 1:00 மணி முதல் 3:15 மணி வரையும், இரண்டாம் பிரிவுக்கு பிற்பகல் 3:00 மணி முதல் 5:30 மணி வரையும் வகுப்புகள் நடைபெற்றது.

2005ம் வருடத்தில் இருந்து 2010ம் வருடம் வரை இக்கல்வி நிலையமானது, இரண்டு வளாகங்களாக வென்ற்வேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையிலும் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville) கிரவின் ஆரம்பப் பாடசாலையிலும் (Girraween Public School, 9 Bando Road, Girraween) நடைபெற்றது. இரு பாடசாலைகளிலும் நியுசவுத்வேல்ஸ் பாடசாலை வாரங்களின் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை நடைபெற்றது.

2011ம் வருடத்தில் இருந்து இக்கல்வி நிலையமானது, இரு பிரிவுகளாக கீழ் வகுப்புகள் (இணைப்பு வகுப்பு உட்பட முன்பள்ளியிலிருந்து நான்காம் வகுப்புவரையுள்ள வகுப்புக்கள்), மேல் வகுப்புகள் (புகுநிலை வகுப்பு உட்பட ஐந்தாம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களும்) கிரவின் ஆரம்பப் பாடசாலையில் (Girraween Public School, 9 Bando Road, Girraween, NSW 2145) நடைபெற்று வருகின்றன. நியுசவுத்வேல்ஸ் பாடசாலை வாரங்களில் வரும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உயர்தரப் பரீட்சைக்குத் (HSC) தமிழை ஒரு பாடமாகத் தோற்ற இருக்கும் மாணவர்களிற்குப் பாடசாலை வாரங்களின் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி தொடக்கம் 5:30 மணி வரையும் வியாழக்கிழமைகளில் மாலை 7.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெறுகிறது.

## பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல்

மாணவர்களை வருட ஆரம்பத்தில் பாடசாலையில் சேர்ப்பது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் பாடாசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவாக ஆரம்பத்திலிருந்தே கற்கக்கூடியதாகவும் சக மாணவர்களுடன் நன்கு அறிமுகம் செய்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். இது பாடசாலையை இடையூறின்றி சிறப்பாக நடாத்த உதவுவதுடன் தங்கள் பிள்ளை சார்பான அரச மானியத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பரிசில்களைத் தீர்மானிப்பதற்கு மாணவர் வரவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது (மேலதிக விபரங்களைப் போட்டி விதிமுறைகளின் கீழ்க் காணலாம்). அத்துடன் பாடசாலை கலைவிழாவில் பங்கேற்பதும் பாடசாலை வரவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்பதால் பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## மாணவர்களின் வயது எல்லை

நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st) நான்கு அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் சிறார்கள் அனைவரும் பாடசாலையில் சேர்ந்து கொள்ளத் தகுதி உடையவராவர்.

## மாணவர்களின் வகுப்பு

பாடசாலையில் சேரும் போது மாணவரின் வயது மற்றும் மொழி அறிவு மதிப்பீடு என்பவற்றிற்கு ஏற்ப தகுந்த வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர். பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

## பாடப்புத்தகங்கள்

பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் என்பன இக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும். இந்நூல்கள் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும். பாடசாலைக்கு வரும்போது மாணவர்கள் பாடசாலையினால் வழங்கப்பட்ட புத்தகங்களுடன் அப்பியாசப்புத்தகம், எழுது கருவிகள் என்பவற்றுடன் வகுப்பு ஆசிரியர் குறிப்பிடும் உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும். **பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் தொலையுமிடத்து அதற்கு மாற்றீடாக வழங்கப்படும் புத்தகங்களுக்கு தலா $10 அறவிடப்படும்.**

## இடைவேளை

**மாணவர்களுக்கு இடைவேளையின் போது (பிற்பகல் 3:15 முதல் 3:30 மணி வரை) பிஸ்கற்றும் குளிர்பானமும் வழங்கப்படும். பாடசாலையில் இணையும் முதற்கிழமையில் பெற்றோர் இவற்றை பார்வையிட்டுத் தங்கள் குழந்தைகளுக்கு ஏற்றது என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.**

## பாடசாலை அறிவித்தல்கள்

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் செய்தி மடல் (Newsletter), மின் அஞ்சல் (e-mail) மற்றும் இணையத்தளம் (wtsc.org.au) மூலம் அறிவிக்கப்படும். செய்தி மடல்கள் மின்அஞ்சல் (e-mail) மூலமாக அனுப்பப்படும். இது தவிர பாடசாலை நாட்களில் பிற்பகல் 2:00 மணி முதல் 2:15 மணி வரை நடைபெறும் மாணவர் ஒன்றுகூடலிலும் முக்கியமான அறிவித்தல்கள் வழங்கப்படும். எனவே பெற்றோர்கள் இவ்வொன்றுகூடலில் பங்குபற்றுவது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

## நிதி உதவி

இப்பாடசாலையினை நடாத்துவதற்கு நியுசவுத்வேல்ஸ் அரசிடமிருந்து ஒழுங்காகப் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் சார்பாக சிறிய தொகை நிதியுதவி கிடைக்கப்பெறுகின்றது. இந்நிதியானது குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக மட்டுமே பாவிக்கப்படலாம் என்பதுடன் எமது பாடசாலையை நடாத்துவதற்கு போதுமானதல்ல. ஆகவே பெற்றோரிடமிருந்து பின்வரும் நிதி அறவிடப்படுகிறது:

நடப்பு கல்வியாண்டில் குடும்பத்தின் முதலாவது மாணவருக்கு தவணை ஒன்றிற்கு $25.00ம் அதே குடும்பத்தின் இரண்டாவது மாணவருக்கு $20.00ம் அதே குடும்பத்தின் மூன்றாவது மாணவருக்கு $15.00ம் வசதிப்பணமாகச் செலுத்த வேண்டும். இத்துடன் ஒவ்வொரு குடும்பத்தினரும் கலை பண்பாட்டு நிதியாக $20.00ம் வருடாந்தம் செலுத்த வேண்டும். ஒரே குடும்பத்தின் நான்காவது அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

அத்துடன் மாணவர்களின் போதிய வரவின்மை காரணமாக அரசமானியம் கிடைக்கப்பெறாதவிடத்து அந்தந்த மாணவர்களிற்குரிய மானியத் தொகையை பெற்றோர்கள் செலுத்துமாறு எதிர் பார்க்கப்படலாம். எனவே பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு:** கலை பண்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதி முதலாவது தவணை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டும். வசதிப்பணம் தவணை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

## தகவல்களை சேகரித்தல்

எமது கல்வி நிலையத்தை நிர்வகிப்பதற்கு அவசியமானது என்று கருதப்படும் உங்களதும் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளினதும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்படுகின்றன. இவற்றுள் சில தகவல்கள் [மாணவர் கல்வி கற்கும் பாடசாலை (Mainstream School), பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் போன்றவை] மாநில கல்வி திணைக்களத்தினால் நிதி உதவி வழங்குவதற்காகவும் பிற காரணங்களுக்காகவும் கோரப்படுகின்றன. அத்துடன் எமது நிலையத்தின் கல்வி, நிர்வாக தேவைகளுக்கும் இவ்விபரங்கள் பயன்படுத்தப்படும். மேலும் இத்தகவல்கள் பாடசாலை வேளையில் ஏற்படும் அவசர நிலமைகளின் போது உங்களைத் தொடர்பு கொள்ளவும் பயன்படுத்தப்படும். **முக்கியமான அறிவித்தல்கள், செய்திமடல்கள் என்பன மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். எனவே எல்லா பெற்றோர்களும் தங்கள் நாளாந்தப் பாவனையிலுள்ள குறைந்தபட்சம் ஒரு மின்னஞ்சல் முகவரியையாவது வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது உணவு ஒவ்வாமை (Food Alergy) அல்லது வேறு ஏதாவது மருத்துவத் தேவை (Medical Condition) இருப்பின் அதனை எமக்கு உடன் அறியத்தருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

## பேச்சுப் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம் பேசக் கொடுக்கப்படும்.
2. மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவார்கள்.
3. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது சொல்லக்கூடாது.
4. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர் நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசிக்காட்ட வேண்டும்.
5. பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களுக்கு மேலாக எதையும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது (அவை வணக்கம் உட்பட).
6. பேசும்பொழுது தடங்கல் ஏற்பட்டால் உதவி செய்யப்படும். ஆனால் இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
7. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்குமுன் பாடசாலைக்கு சமுகம் அளிக்கவேண்டும்.
8. போட்டிக்கு புள்ளிகள் கொடுக்கப்படும் விபரம்:

| | |
|---|---|
| பாடசாலை வரவு | 10 புள்ளிகள் |
| நடுவர்களின் மதிப்பீடு | 90 புள்ளிகள் |

9. பாடசாலை வரவு: நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். இரண்டு (2) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. இரண்டு (2) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் இல்லை. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.
10. நடுவர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளின் விபரம்:

| | |
|---|---|
| மேடை மரபு | 10 புள்ளிகள் |
| தெளிவான, சரியான உச்சரிப்பு | 20 புள்ளிகள் |

மீதமுள்ள 60 புள்ளிகள் பின்வருமாறு கொடுக்கப்படும்:

(i) ஆரம்ப வகுப்புத் தொடக்கம் ஆண்டு 3 வரை உள்ள மாணவர்களுக்கு

| | |
|---|---|
| பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல் | 20 புள்ளிகள் |
| பிழை விடாது பேசுதல் | 40 புள்ளிகள் |

(ii) ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 6 வரை உள்ள மாணவர்களுக்கு

| | |
|---|---|
| பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல் | 30 புள்ளிகள் |
| பிழை விடாது பேசுதல் | 30 புள்ளிகள் |

(ii) ஆண்டு 7 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்கு

| | |
|---|---|
| பிழை விடாது பேசுதல் | 20 புள்ளிகள |
| பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல் | 20 புள்ளிகள் |
| வாய்மொழித் தொடர்பாற்றல் | 20 புள்ளிகள் |

வாய்மொழித் தொடர்பாற்றலில், மாணவர்களின் உரையாடும் திறமையும், தமிழ் மொழியில் சொல்லறிவும், விளங்கிக் கொள்ளும் திறனும், கூச்சமின்றித் தமிழில் பேசும் திறனும் பரிசோதிக்கப்படும். இம்முறை மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்து 3 கேள்விகள், பேச்சுப் போட்டித் தினத்திற்கு முந்திய வாரத்தில் இதற்கென நியமிக்கப்பட்ட குழுவினரால் கேட்கப்பட்டுப் புள்ளிகள் வழங்கப்படும். ஆகவே மாணவர்கள் கொடுக்கப்பட்ட விடயங்களைச் சரியாக புரிந்துகொள்வதுடன், அந்த விடயங்களில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கேள்விகள் பாடசாலை வகுப்பு நேரத்திலேயே கேட்கப்படும்.

## வாசிப்புப் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாசிக்கக் கொடுக்கப்படும்.

2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்குமுன் பாடசாலைக்கு சமுகம் அளிக்கவேண்டும்.

3. வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலை வரவு, வகுப்பு வேலை ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்குவார்கள்.

4. போட்டிக்கான புள்ளிகள்:

| | |
|---|---|
| பாடசாலை வரவு: | 10 புள்ளிகள் |
| வகுப்பு வேலை: | 20 புள்ளிகள் |
| போட்டி நாளன்று: | 70 புள்ளிகள் |

5. பாடசாலை வரவு: நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

6. வகுப்பு வேலை: இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலைத் தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட நாட்காட்டிக்கு அமைய வகுப்பில் எழுதக் கொடுக்கப்படும் எழுத்துச் சோதனைகளுக்குப் பிழை விடாது எழுதுதல், தெளிவாக எழுதுதல் போன்றவற்றுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். நாட்காட்டியின்படி போட்டித் திகதிக்கு முன் இரண்டு வகுப்பு வேலைகளும் அரை ஆண்டுப் பரீட்சையும் நடாத்தப்படும். வகுப்பு வேலைக்கும் அரை ஆண்டுப் பரீட்சைக்கும் ஆசிரியர் புள்ளிகள் வழங்குவார். இவற்றிலிருந்து இரண்டு அதி கூடிய புள்ளிகள் போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**போட்டி நாளன்று:**

7. ஒரு பெற்றாரும் ஆசிரியரும் நடுவர்களாக இருந்து மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்குவார்கள்.

8. படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியில் போட்டி நடைபெறும். பிழை விடாது வாசித்தல், தெளிவாக வாசித்தல், சரளமாக வாசித்தல் போன்றவற்றுக்கு புள்ளிகள் கொடுக்கப்படும். எந்தப் பகுதியில் போட்டி நடைபெறும் என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட மாட்டாது.

9. ஆண்டு 7 உடன் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில உள்ள மாணவர்களுக்கு, படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியும், படிக்காத ஒரு பகுதியிலிருந்தும் வாசிப்புப் போட்டி நடைபெறும். படித்த பாடங்களை வாசிப்பதற்கு 65 சதவீத புள்ளிகளும் படிக்காத பாடங்களை வாசிப்பதற்கு 20 சதவீத புள்ளிகளும் கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலுக்கும் 5 புள்ளிகள் வீதம் கொடுக்கப்படும். மொத்தப்புள்ளிகளை 70 சதவீதமாக மாற்றப்பட்டு போட்டி மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## எழுத்துப் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) எழுதக் கொடுக்கப்படும்.

2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.

3. வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலை வரவு, வீட்டு வேலை, வகுப்பு வேலை ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்குவார்கள்.

4. போட்டிக்கான புள்ளிகள்:

| | | |
|---|---|---|
| பாடசாலை வரவு | : | 10 புள்ளிகள் |
| வகுப்பு வேலை | : | 20 புள்ளிகள் |
| வீட்டு வேலை | : | 10 புள்ளிகள் |
| போட்டி நாளன்று | : | 60 புள்ளிகள் |

5. பாடசாலை வரவு: நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

6. வகுப்பு வேலை: இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலைத் தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட நாட்காட்டிக்கு அமைய வகுப்பில் எழுதக் கொடுக்கப்படும் எழுத்துச் சோதனைகளுக்குப் பிழை விடாது எழுதுதல், தெளிவாக எழுதுதல் போன்றவற்றுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். நாட்காட்டியின்படி போட்டித் திகதிக்கு முன் இரண்டு வகுப்பு வேலைகளும் அரை ஆண்டுப் பரீட்சையும் நடாத்தப்படும். வகுப்பு வேலைக்கும் அரை ஆண்டுப் பரீட்சைக்கும் ஆசிரியர் புள்ளிகள் வழங்குவார். இவற்றிலிருந்து இரணடு அதி கூடிய புள்ளிகள் போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

7. வீட்டு வேலை: இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். கொடுக்கப்படும் ஒவ்வொரு வீட்டு வேலையையும் முழுவதும் செய்தால் வீட்டு வேலைகான 50 சதவீத புள்ளிகள் கொடுக்கப்படும். குறைவாகச் செய்திருந்தால் அதற்கேற்ப புள்ளிகள் கொடுக்கப்படும். மிகுதி 50 சதவீதப் புள்ளிகள் பிழை விடாது எழுதுதல், தெளிவாக எழுதுதல் போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு வீட்டு வேலைக்கும் ஆசிரியர் புள்ளிகள் வழங்குவார். மாணவர்கள் பாடசாலைக்கு வராத நாட்களில் செய்யத் தவறிய வீட்டு வேலையை ஆசிரியரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவது பெற்றோர் அல்லது மாணவரது பொறுப்பாகும்.

**போட்டி நாளன்று:**

8. படித்த பாடங்கள் முழுவதிலும் வெவ்வேறு பகுதிகள் அடங்கியதாக ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் பரீட்சைக்காக மாணவர்களுக்குக் கொடுக்கப்படும்.

9. ஒவ்வொரு சரியான பதில்களுக்கும் அந்தக் கேள்விக்கு ஒதுக்கப்பட்ட முழுப்புள்ளிகளும் வழங்கப்படும்.

10. எழுத்து, சொல், வாக்கிய அமைப்பு, இலக்கணம் ஆகியவற்றில் பிழைகள் இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும்.

## தமிழ் அறிவுப் (வினா விடைப்) போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வினா விடைப் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. இப் போட்டிகள் கீழ் வகுப்பு மாணவர்கள் மேல் வகுப்பு மாணவர்கள் என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
4. கீழ் வகுப்பு மாணவர்களிடம் 20 தமிழ் அறிவு சம்பந்தமான கேள்விகள் கேட்கப்படும்.
5. மேல் வகுப்பு மாணவர்களிற்கு தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து அரை இறுதிப்போட்டிக்கு 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிப்போட்டிக்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.
6. ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களிற்குப் பரிசில்கள் வழங்கப்படும். போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் மாணவர்களின் தமிழில் உரையடும் (பேச்சுத் தமிழ்) திறன் கணிக்கப்படும்.
4. மாணவர்கள் வகுப்பிற் கற்ற விடயங்களுடன் அவர்களின் தமிழ் அறிவின் அடிப்படையில் பொதுவான விடயங்களைப்பற்றிக் கதைக்கும் படி கேட்கப்படுவார்கள்.
5. மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு, தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன், கூச்சமின்றி கதைக்கும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
6. வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலை வரவு, வகுப்பில் தமிழில் கதைத்தல் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்குவார்கள்.
7. போட்டிக்கான புள்ளிகள்:

| | | |
|---|---|---|
| பாடசாலை வரவு | : | 10 புள்ளிகள் |
| வகுப்பில் தமிழில் கதைத்தல் | : | 30 புள்ளிகள் |
| போட்டி நாளன்று | : | 60 புள்ளிகள் |

8. பாடசாலை வரவு: நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.
9. வகுப்பில் தமிழில் கதைத்தல்: இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். மாணவர் வகுப்பு நேரங்களில் வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசிரியருடனும் தமிழில் உரையாடியதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

## பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப் பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் எடுத்தவர்கள் மாத்திரமே பரிசில்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாவர். போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். ஒரு வகுப்பில் போட்டியில் 35 ற்கு மேல் புள்ளிகள் எடுத்த மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு கீழ் தரப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுதவர்கள் அத்துடன் முதல் 20% மாணவர்கள். | முதலாம் பிரிவு |
| 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (90 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | இரண்டாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (80 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |

போட்டிகளில் பங்குபற்றி 35 புள்ளிகளிற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் போட்டியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாணவர்களின் போட்டி முடிவுகள் அதைத் தொடர்ந்து வரும் அடுத்த தமிழ்ப் பாடசாலை நாளில் வழங்கப்படும்.

## மந்திரி விருது (Minister Award)

நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கத்தின் சமுதாய மொழிப் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் மேற்பிரிவு மற்றும் கிழ்ப்பிரிவு என்னும் இரு நிலைகளில் ஒவ்வொரு மொழிப் பாடசாலை மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் மாநில மட்டத்தில் வழங்கப்படும்.

## புதிய முயற்சிகள்

- மாணவர்களுக்கு விவாதப் போட்டியில் (பட்டி மன்றம்) பங்குபற்றுவதற்கு பயிற்சி வழங்குதல்.
- நடப்பு ஆண்டு ஆடி 31ம் திகதி அன்று (July 31st) நான்கு அல்லது அதற்குக் குறைந்த வயதை உடைய சிறார்களிற்கு விசேட **“மழலைத் தமிழமுதம்”** வகுப்புக்களை நடாத்துதல்.

## பாடசாலை மாணவர்களின் கடமைகள்

- பாடசாலைக்குத் தவறாது சமுகமளிப்பதுடன் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னதாக கூட்ட மண்டபத்திற்கு வருதல் வேண்டும்.
- ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்ற பின்னரே மாணவர்கள் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.
- வகுப்பாசிரியர் கேட்டுக்கொண்டால் அன்றி வகுப்பு ஒழுங்கை மாற்றி அமைக்கக் கூடாது. அவ்வாறு வகுப்பு ஒழுங்கை மாற்றி அமைக்கும் பட்சத்தில் பாடசாலை முடிவடையும் போது ஆரம்பத்தில் இருந்தவாறு வகுப்பு ஒழுங்கை மீழ அமைப்பதற்கு உதவ வேண்டும்.
- வகுப்பறை பொருட்களைச் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. வகுப்பறை உடைமைகளைச் சேதப்படுத்தக் கூடாது.
- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் நடந்து கொள்ள வேண்டும்.
- வீட்டு வேலைகள் தரப்பட்டிருந்தால் அவற்றை பாடசாலைக்கு வருவதற்கு முன்னர் பூர்த்தி செய்து கொண்டு வருதல் வேண்டும்.
- வகுப்பாசிரியர் அனுமதியின்றி இடைவேளை தவிர்ந்த நேரங்களில் வகுப்பறையை விட்டு வெளியேறக் கூடாது.
- இடைவேளையின் போது பாடாசாலை வளாகத்தை விட்டு வெளியே செல்லக் கூடாதுமற்றும் ஆசிரியர்கள் இல்லாமல் வகுப்பறைக்கு செல்லக் கூடாது.
- இடைவேளையின் போது வரிசைக்கிரமமாக நின்று குளிர்பானம் பெற்றுக் கொள்ள வேண்டும். குளிர்பானங்களை அருந்திய பின்னர் பிளாஸ்ரிக் குவளைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் போட வேண்டும்.
- பாடசாலை முடிவடைந்த பின்னர் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இன்றி பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேறக் கூடாது.

## பெற்றோரின் கடமைகள்

- பிள்ளைகளைத் தவறாது பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். இது மாணவர்களின் தொடர்ச்சியான அறிவு வளர்ச்சிக்கும் பாடசாலையை ஒரு கட்டமைப்போடு நடாத்துவதற்கும் அவசியமானதொன்று.
- மிக இலகுவான முறையிலும் பிள்ளைகளின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடுங்கள். இது பிள்ளைகளின் மொழிப்பற்றை வளர்ப்பதற்கு உதவுவதுடன் அவர்கள் தமிழ் மொழியை பயில்வதையும் இலகுவாக்கும்.
- அன்றாட தமிழ் பாடசாலை நிகழ்வுகளை பிள்ளைகளிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் கவனிப்பையும் தமிழ் மொழியில் உள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுவதுடன் பிள்ளைகளை அடுத்த வகுப்பிற்கு தயார் படுத்தவும் (வகுப்பு வேலைகள், நிகழ்ச்சிக்கான பயிற்சிகள்) உதவும்.
- பாடசாலை முடிவடைய 10 நிமிடம் முன்னதாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவர்களை ஆசிரியர்களிடமிருந்து பொறுப்பேற்று செல்ல வேண்டும்.
- மாணவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு அவர்களை பாடசாலை வளாகத்தினுள் அழைத்து வந்து விட்டுச் செல்லுங்கள்.
- பாடசாலை நிர்வாகத்தின் அனுமதி இன்றி பாடசாலை வேளையில் மாணவர்களை அழைத்துச் செல்லக் கூடாது. மாணவர்கள் 15 நிமிடத்திற்கு மேல் தாமதமாக பாடசாலைக்கு வந்தால் நிர்வாகத்தினரின் அனுமதியைப் பெற்ற பின்னரே வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.
- ஒவ்வொரு தவணையின் போதும் குறிப்பிட்ட ஒரு நாளில் மாணவர்களின் பாதுகாப்பை கண்காணிப்பதிலும், குளிர்பானம் வழங்குவதிலும் உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள். உங்கள் கடமைநாள் உங்கள் பிள்ளையின் வகுப்பினால் ‘மாணவர் ஒன்றுகூடல்’ (Assembly) நடாத்தும் தினமாகும். ஒன்றிற்கு மேற்பட்ட பிள்ளைகள் கற்கும் பட்சத்தில்

மூத்த பிள்ளையின் வகுப்பு கருத்திற் கொள்ளப்படும். இது தவிர வருடாந்த நிகழ்வுகளான கலைவிழா மற்றும் பரிசளிப்பு விழா என்பவற்றை ஒழுங்கு செய்வதில் உதவுங்கள்.

- கலை விழாவில் உங்கள் பிள்ளை பங்குபற்றுமிடத்து பயிற்சிகளுக்குத் தவறாது உரிய நேரத்திற்குப் பிள்ளையை அழைத்து வாருங்கள்.
- **பாடசாலைச் சுற்றாடலில் வாகனங்களை வீதி நெறி முறைகளுக்கமைய நிறுத்தி வைப்பதோடு உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். குறிப்பாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வாகனப் போக்கு வரத்து அதிகமாக இருப்பதனால் இந்த நேரங்களில் கூடிய கவனம் செலுத்தவும்.**
- ஒவ்வொரு பெற்றோரும் தாமாக முன்வந்து செயற்குழுவில் பங்கெடுங்கள், ஒத்துழையுங்கள், கருத்துத் தெரிவியுங்கள், உதவுங்கள். இதனால் பெற்றோருக்குத் தமிழ் பாடசாலையிலுள்ள அக்கறை கண்டு மாணவர்கள் உற்சாகமடைவார்கள்.
- பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் தொடர்பு இலக்கங்கள் அல்லது முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை எமக்கு உடன் அறியத்தரவும்.

## மாணவர்கள் வகுப்பில் தெரிந்து கொள்ள வேண்டியவை, கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள்

### 1. விதிமுறைகள்

1. வணக்கம் சொல்லுதல்
2. தமிழ் மொழி வாழ்த்துப் பாடுதல்
3. பெரியவர்களிற்கு மரியாதை செலுத்துதல்
4. பரிசு வாங்கும் போது இரண்டு கைகளாலும் வாங்குதல்
5. வகுப்பில் அமைதியாக இருத்தல்
6. சக மாணவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருத்தல்
7. சண்டை பிடிக்காதிருத்தல்
8. பாடசாலைப் பொருட்களைத் தொடாதிருத்தல்
9. பிறர் பொருட்களை தொடாதிருத்தல்
10. பாடசாலைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருதல்
11. ஆசிரியர் சொல்வதை அவதானமாகக் கேட்டல்
12. பாடசாலை செய்தித்தாளைப் பெற்றோரிடம் கையளித்தல்
13. பாடசாலையில் தவிர்க்கப்பட்ட இடங்களுக்கு செல்லாதிருத்தல்
14. ஆசிரியர் இன்றி வகுப்பறைக்குள் செல்லாதிருத்தல்
15. வரிசைக்கிரமமாக நின்று குளிர்பானம் பெற்றுக் கொள்ளல்
16. கையடக்கத் தொலைபேசியை வகுப்பில் பயன்படுத்தாதிருத்தல்

### 2. அறிமுகம் (பெயர்களும்)

1. அதிபர்
2. உபஅதிபர்
3. ஆசிரியர்
4. சக மாணவர்கள்

### 3. பாடசாலை பற்றிய விபரங்கள்

1 பாடசாலையின் பெயர்
2 பாடசாலை நாள்
3 பாடசாலை நேரம்
4 பாடசாலையின் நோக்கம்
5 பாடசாலைக் கீதம்

# DUTY OF CARE POLICY

1) School starts at 2:00 p.m. and finishes at 4:30 p.m. Wentworthville Tamil Study Centre (WTSC) will endeavor to provide adequate care and supervision to students from 5 minutes prior to school start and 5 minutes after school finish (hereafter **school hours** is referred to 1:55 p.m. to 4:35 p.m).

2) It is the parents' or guardians' responsibility to bring their children safely to the school gate and collect their children on time from the school gate before and after school hours respectively. WTSC will **not** take any responsibility for any incidents or accidents that take place outside the school premises before or after the school hours.

3) It is the parents' responsibility to provide emergency contact numbers to the school administration. Parent or Guardian will be notified of accidents or incidents that took place within the school premises during school hours.

4) In classroom student numbers will endeavor to maximum of 20 per teacher to ensure adequate supervision.

5) All students are required to read and understand the code of behaviour.

6) The WTSC Committee will engage minimum of two committee members to supervise students on a rotation basis during the following hours:

    - from 1:55 p.m. to 2:00 p.m.;
    - during drink breaks and
    - from 4:30 p.m. to 4:35 p.m.

7) Students are **not** allowed to bring knives, blades, cricket balls, marbles, chewing gum and/or any other item that can cause injury to them and/or others.

8) Students will not be allowed to go outside the school premises during school hours. In case students need to leave the school early, they should obtain permission from the Principal/Assistant Principal.

9) A First Aid Kit will be available at all times in the Principals office. An *Accident/Incident Notification Form* is available to be completed, signed and filed. Parent(s) or guardian will be notified as soon as practicable. All accidents or incidents will be reported orally and/or in writing to all concerned.

10) The school will obtain written permission from the parents prior to going on any Excursions, unless the parent(s) or guardian accompany.

11) The committee will make sure that all equipment and classrooms are kept functional and safe to the staffs and students. Students will not be allowed to touch belongings of the mainstream school.

12) Students may be required to come for participation in or practice for functions such as Kalaivizha outside the school hours at venues other than normal school premises. It is the parent's or guardian's responsibility to ensure the safety and welfare of the children during these occasions.

13) The Duty of Care Policy Statement will be made available if requested by parents, guardians, visitors or students during school hours.

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

## Wentwothville Tamil Study Centre

## பாடசாலை நாட்காட்டி - 2016 (01-03-2016)

| திகதி | தமிழ் மொழி வாழ்த்து / பாடசாலைக் கீதம்/ ஒன்றுகூடல் நிகழ்ச்சி | வாரம் | நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் | போட்டிகள் / மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| 16-Jan-16 | | | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| 30-Jan-16 | அனைத்து வகுப்புக்களும் | 1 | பாடசாலை ஆரம்பம் | |
| 06-Feb-16 | 8 தனிநாயகம் | 2 | | |
| 13-Feb-16 | 7 இளங்கோ | 3 | பெற்றோர்கள்/செயற்குழு கலந்துரையாடல் (கீழ் வகுப்புக்கள்) | |
| 20-Feb-16 | 6 வள்ளுவர் | 4 | பெற்றோர்கள்/செயற்குழு கலந்துரையாடல் (மேல் வகுப்புக்கள்) | |
| 27-Feb-16 | 5 கம்பர் | 5 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்புக்கள்) | |
| 05-Mar-16 | 4 கண்ணதாசன் | 6 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்புக்கள்) | |
| 12-Mar-16 | 4 பாரதிதாசன் | 7 | | |
| 19-Mar-16 | 4 காளிதாசன் | 8 | | |
| 26-Mar-16 | | | **தமிழ்ப் பாடசாலை நடைபெறமாட்டாது (நியூ சவுத் வேல்ஸ் மாநில விடுமுறை தினம்)** | |
| 02-Apr-16 | 3 நட்சத்திரம் | 9 | | **வகுப்பு வேலை** |
| 09-Apr-16 | 3 சந்திரன் | 10 | மாணவர்களிற்கு பேச்சுப் போட்டி வழங்குதல் (ஆரம்பப்பள்ளி - ஆண்டு 9) | |
| 16-Apr-16<br>23-Apr-16 | **பாடசாலை விடுமுறை** | | | |
| 30-Apr-16 | 3 சூரியன் | 1 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| 07-May-16 | 2 தாமரை | 2 | | **பேச்சுப் போட்டி** |
| 14-May-16 | 2 மல்லிகை | 3 | | |
| 21-May-16 | 2 செவ்வந்தி | 4 | | |
| 28-May-16 | 1 நீலம் | 5 | | |
| 04-Jun-16 | 1 சிவப்பு | 6 | | |
| 11-Jun-16 | 1 மஞ்சள் | 7 | | **மீட்டல் (Revision)** |
| 18-Jun-16 | 1 பச்சை | 8 | | **அரை ஆண்டுப்பரீட்சை** |
| 25-Jun-16 | 9 விபுலாநந்தர் | 9 | | |
| 02-Jul-16 | புகுநிலை வகுப்பு - ஔவை | 10 | | **மாணவர் அறிக்கை** |
| 09-Jul-16<br>16-Jul-16 | **பாடசாலை விடுமுறை** | | | |
| 23-Jul-16 | ஆரம்பப்பள்ளி – புறா | 1 | | **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி** |
| 30-Jul-16 | ஆரம்பப்பள்ளி – அன்னம் | 2 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | **தமிழ் அறிவுப் போட்டி** |
| 06-Aug-16 | ஆரம்பப்பள்ளி – குயில் | 3 | | |
| 13-Aug-16 | ஆரம்பப்பள்ளி – வாத்து | 4 | வகுப்பு புகைப்படம் எடுத்தல் **(Photo day)** | |
| 20-Aug-16 | 12 தொல்காப்பியர் | 5 | | |
| 27-Aug-16 | 10/11 அகத்தியர் | 6 | | |
| 03-Sep-16 | | 7 | **கலைவிழா** | |
| 10-Sep-16 | 9 (HSC) நக்கீரர் | 8 | | |
| 17-Sep-16 | 8 தனிநாயகம் | 9 | | |
| 24-Sep-16 | 7 இளங்கோ | 10 | | **வகுப்பு வேலை** |
| 01-Oct-16<br>08-Oct-16 | **பாடசாலை விடுமுறை** | | | |
| 15-Oct-16 | பேச்சுத்தமிழ் வகுப்பு - நாவலர் | 1 | | |
| 22-Oct-16 | முன்பள்ளி - கிளி | 2 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்புக்கள்) | |
| 29-Oct-16 | முன்பள்ளி – மயில் | 3 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்புக்கள்) | |
| 05-Nov-16 | முன்பள்ளி – மான் | 4 | | |
| 12-Nov-16 | 6 வள்ளுவர் | 5 | | **எழுத்துப் போட்டி** |
| 19-Nov-16 | 5 கம்பர் | 6 | | **வாசிப்புப் போட்டி** |
| 26-Nov-16 | இணைப்பு வகுப்பு - பாரதி | 7 | HSC தகவல் தினம் (HSC Information session) | |
| 03-Dec-16 | புகுநிலை வகுப்பு - வீரமாமுனிவர் | 8 | | |
| 10-Dec-16 | பரிசளிப்பும் இராப்போசனமும் | | | |
| 17-Dec-16 | அனைத்து வகுப்புக்களும் | 10 | இறுதி நாள் நிகழ்ச்சிகள். நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஒன்றுகூடல் (தேநீர் விருந்து) | **மாணவர் அறிக்கை** |